ரூ.928 கோடியில் பாமாயில், துவரம் பருப்பு கொள்முதல்

விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த தமிழ்நாடு அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள்!

உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர.சக்கரபாணி அறிக்கை!

சென்னை, ஜூலை 15- விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த 928 கோடி ரூபாய் மதிப்பிற்குப் பாமாயில் மற்றும் துவரம் பருப்பு கொள்முதல் செய்ய தமிழ்நாடு அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் குறித்து உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அவர்களின் அறிக்கை வருமாறு :

வெளிச்சந்தையில் விலைவாசி உயர்வினைக் கட்டுப்படுத்தவும் மக்களுக்கு ஊட்டச்சத்து கிடைத்திடவும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கடந்த 2007 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட சிறப்பு பொது விநியோகத்திட்டத்தின் கீழ் துவரம் பருப்பு மற்றும் பாமாயில் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

முதலமைச்சர் அவர்கள் 10.07.2023 அன்று அமைச்சர்கள் மற்றும் அலுவலர்களுடன் விலைவாசி உயர்வு தொடர்பாக நடத்திய ஆய்வுக் கூட்டத்தினைத் தொடர்ந்து என் தலைமையிலும் தலைமைச் செயலாளர் முன்னிலையிலும் விலைக் கட்டுப்பாட்டு குழுக் கூட்டம் 11.07.2023 அன்று நடைபெற்றது.

முதலமைச்சர் அவர்களும் ஒன்றிய வர்த்தகம் & தொழில் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொதுவிநியோகத் திட்டம் மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களுக்கு தமிழ்நாட்டிற்கு மாதம் ஒன்றிற்கு 10,000 மெட்ரிக் டன் கோதுமை மற்றும் 10,000 மெட்ரிக் டன் துவரம் பருப்பு ஒதுக்கீடு செய்திடக் கோரி கடிதம் எழுதியிருந்தார். விலைவாசி உயர்வினைக் கட்டுப்படுத்தும் விதமாக, உடனடியாக, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் 2023 மாதங்களுக்குத் தேவையான 40,000 மெ.டன் துவரம் பருப்பு 464.79 கோடி ரூபாய்க்கும் ஜீலை, ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் 2023 மாதங்களுக்குத் தேவையான 5.10 கோடி பாமாயில் பாக்கெட்டுகள் 463.48 கோடி ரூபாய்க்கும் மொத்தம் ரூ.928.27 கோடி மதிப்பில் கொள்முதலுக்கான ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. துவரம் பருப்பு மற்றும் பாமாயில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் அனைத்து மண்டலக் கிடங்குகளிலும் இறக்கம் செய்யப்பட்டு வருகின்றன. அந்தக் கிடங்குகளிலிருந்து நியாயவிலை அங்காடிகளுக்கு நகர்வு செய்யப்பட்டு குடும்ப அட்டைதாரர்களுக்குத் தங்குதடையின்றி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

தக்காளி விலை உயர்வினால் பொதுமக்கள் பாதிக்கப்படாமலிருக்க நியாயவிலைக் கடைகள் மூலமாக தக்காளி கிலோ ஒன்றிற்கு 60 ரூபாய் விலையில் வழங்கப்பட்டுவருகிறது. இன்று முதல் சென்னையில் ஏழு அமுதம் அங்காடிகளிலும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்தும் ஏழு நியாயவிலைக் கடைகளிலும் தக்காளி கிலோ ஒன்றிற்கு 60 ரூபாய்க்கும் துவரம் பருப்பு அரை கிலோ 75 ரூபாய்க்கும்

உளுந்தம் பருப்பு அரை கிலோ 60 ரூபாய்க்கும் விற்கப்பட்டு வருகிறது.

இதற்குத் தமிழ்நாடு அரசால் பராமரிக்கப்பட்டு வரும் விலைக் கட்டுப்பாட்டு நிதி பயன்படுத்தப்படுகிறது.

குடிமைப்பொருள் குற்றப் புலனாய்வுத்துறை மூலமாகவும் இன்றியமையாப் பொருள்கள் பதுக்கப்படாமலிருக்கவும் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

முதலமைச்சர் அவர்கள் விலைவாசி உயர்வால் பொதுமக்கள் பாதிக்கப்படாமலிருக்க மேற்குறிப்பிட்டவாறு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறார்கள்.

இவ்வாறு அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

சென்னை மாநகரில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை செயல்படுத்துவதற்காக பயன்படுத்தப்படவுள்ள 1800 பயோ மெட்ரிக் கருவிகளின் செயல்பாடுகளை கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ.இராதாகிருஷ்ணன் நேற்று (14.07.2023) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் பார்வையிட்டார். உடன் நுகர்பொருள் வாணிபக் கழக ஆணையாளர் ராஜாராமன், கூடுதல் ஆணையாளர் (வருவாய் (ம) நிதி)) திருமதி ஆர்.லலிதா, இணை ஆணையாளர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ்.சமீரன், உதவி ஆணையாளர் (பொ.நி.(ம)ப.) சூரியபிரகாஷ் மற்றும் பணியாளர்கள் இருந்தனர்.

தமிழ்நாடு பதிவுத்துறையில்

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்த அரசாணை வெளியீடு!

சென்னை, ஜூலை 15- தமிழ்நாடு பதிவுத்துறையில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை அறிமுகபடுத்த அரசாணை வெளியிடபட்டுள்ளது.

இது தொடர்பாக வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில்:

தமிழ்நாடு முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்களால் பதிவுத்துறையில் முன்னோடித் திட்டமாக 06.02.2000 முதல் அறிமுகப்படுத்தப்பட்ட 'ஸ்டார்' திட்டம் தற்போது பல்வேறு பரிணாம வளர்ச்சிகள் அடைந்து கணினிமயமாக்கலில் பதிவுத்துறையை ஒரு முன்னோடியாகத் திகழ வைத்துள்ளது. பதிவுத்துறையில் வழங்கப்பட்டு வரும் அனைத்து சேவைகளும் இணையதள அமைப்பிலான 'ஸ்டார் 2.0' திட்டத்தின் கீழ் தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

பதிவுத்துறையின் கணினிமயமாக்கல் முதலமைச்சரின் உத்திரவின்படி, அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது. இதனடிப்படையில் தற்போதுள்ள 'ஸ்டார் 2.0' திட்டத்தின் கீழ் வழங்கப்படும் சேவைகளில் செயற்கை நுண்ணறிவு (AI), மெஷின் லேர்னிங், பெருந்தரவு பகுப்பாய்வு முதலான மேம்படுத்தப்பட்ட தகவல் தொழில் நுட்ப உத்திகளை உட்புகுத்துதல், சான்றிட்ட நகல் மற்றும் வில்லங்க சான்று முதலான சேவைகளை தானியங்கி முறையில் தன்னிச்சையாக தயாரித்தல் முதலான பல்வேறு அதிநவீன தொழில்நுட்ப திட்டங்களைச் செயல்படுத்தும் விதமாக ரூ.323.45 கோடி செலவில் 'ஸ்டார் 3.0' திட்டம் அடுத்த ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட 12.07.2023 அன்று அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை கண்காணிப்பதற்காக தலைமை செயலாளரின் தலைமையிலான பதிவுத்துறை மாநில தலைவர் அளவிலான குழுவும், செயல்படுத்துவதற்காக தலைமையிலான திட்ட செயலாக்க குழுவும் உருவாக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கென திட்ட ஒருங்கிணைப்பாளரைத் தேர்ந்தெடுக்கவும், திட்ட ஆலோசகர்கள் இருவரை நியமிக்கவும், இத்திட்டத்தின் செயல்திறன், செயல்பாடு மற்றும் பாதுகாப்பு முதலானவற்றைத் தணிக்கை செய்ய மூன்றாம் தரப்பு தணிக்கையாளர்களை அடையாளம் காணவும் பதிவுத்துறை தலைவருக்கு அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது,

முழுமையான வன்பொருள், மென்பொருள், பணியமைப்பு மற்றும் கட்டமைப்பு வசதிகளுடன் அறிமுகப்படுத்தப்படவுள்ள 'ஸ்டார் 3.0' திட்டமானது பதிவுக்கு வரும் பொதுமக்களுக்கு எளிய, வெளிப்படையான, பாதுகாப்பான மற்றும் துரிதமான மற்றும் எதிர்பார்க்கப்படுகிறது. உயர்தரத்திலான சேவைகளை

வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது என கூறபட்டுள்ளது.

ரபேல் ஊழல் விவகாரம்:

பிரான்ஸ் நாட்டின் ஊடகங்களில் மீண்டும் விவாதப் பொருளானது!

பிரதமர் மோடி பயணத்தின் எதிரொலி!

பாரீஸ், ஜூலை 15 - இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, 2 நாள் அரசு முறைப் பயணமாக பிரான்ஸ் சென்றுள்ள நிலையில், ரபேல் ஊழல் விவகாரம் அந்நாட்டு ஊடகங்களில் மீண்டும் விவாதப் பொருளாக மாறியுள்ளது. பிரதமரின் தற்போதைய பயணத்தில், இந்தியா - பிரான்ஸ் இடையே சுமார் 90 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு வர்த்தக ஒப்பந்தங்கள் கையெழுத்தாக உள்ளதாகவும், இதில், பிரான்ஸ் நாட்டிடமிருந்து புதிதாக 26 ரபேல் விமானங்களை வாங்கும் ஒப்பந்தமும் அடங்கும் என்று கூறப்படுகிறது.

இந்திய கடற்படைக்காக 22 ஒற்றை இருக்கை கொண்ட ரபேல் கடற்படை விமானம், 4 பயிற்சி விமானம் மற்றும் 3 ஸ்கார்பீன் வகை நீர்மூழ்கிக் கப்பல் களைக் கொள்முதல் செய்யும் ஒப்பந்தம் குறித்து பிரதமர் மோடியின் பிரான்ஸ் பயணத்தின் போது அறிவிப்பு வெளியாகும் என தெரிவிக்கப்பட்டு உள்ளது

பிரான்ஸ் நீதிபதி கடிதம்!

இந்நிலையில்தான், 2015 இல் மேற்கொள்ளப்பட்ட ரபேல் ஒப்பந்த ஊழல் விவகாரங்கள் மீண்டும் விவாதமாகியுள்ளன. பிரதமர் மோடி பிரான்சில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நேரத்தில், கடந்த 2015-16 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட ரபேல் ஒப்பந்த ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு பிரான்ஸ் நீதிபதி, இந்திய அரசுக்கு கடிதம் எழுதியிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

அனில் அம்பானிக்கு வரிக்குறைப்பு!

அதுமட்டுமல்லாமல், கடந்த 2015 ஆம் ஆண்டு ரபேல் ஒப்பந்தம் கையெழுத்தான போது, பிரான்ஸ் அரசால் அனில் அம்பானிக்கு வரி குறைப்பு தரப்பட்டுள்ள புதிய தகவலையும் மீடியாபார்ட் வெளிக்கொண்டு வந்துள்ளது. வரிக்குறைப்பிற்காக, அன்றைய பிரான்ஸ் பொருளாதார அமைச்சர் (இப்போது அவர்தான் ஜனாதிபதியாக இருக்கிறார்) இம்மானுவேல் மக்ரோன் மற்றும் நிதி அமைச்சர் மைக்கேல் சபின் ஆகியோருக்கு அனில் அம்பானி கடிதம் எழுதியதாகவும் மீடியாபார்ட் கூறியுள்ளது. அனில் அம்பானியின் கோரிக்கையை ஏற்று, 151 மில்லியன் யூரோ என்றவரிக் கட்டணம், இறுதியில் 6.6 மில்லியன் யூரோவாக குறைக்கப்பட்டது என்பதையும் அம்பலப்படுத்தியுள்ளது.

முன்பு, ரபேல் போர் விமானக் கொள்முதலில் நடந்த ஊழல் முறை கேடுகள் தொடர்பாக, பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த 'மீடியாபார்ட்' என்ற செய்தி இணையதளம்தான் பல்வேறு புலனாய்வு தகவல்களை வெளிக் கொண்டு வந்தது. அதே 'மீடியாபார்ட்' நிறுவனம்தான் இந்த தகவலையும் வெளியிட்டுள்ளது.

புதிய ஒப்பந்தத்தில் பா.ஜ.க. அரசு ஆர்வம்

ஆனால், எதுவுமே நடக்காதது போல இருக்கும் பிரதமர் மோடி, பிரான்சின் பாஸ்டில் தினக் கொண்டாட்டத் தில் கௌரவ விருந்தினராகப் பங்கேற்கவும், பல ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில், மேலும் 26 ரபேல் போர் விமானங்கள் மற்றும் 3 நீர்மூழ்கி கொள் முதல் ஒப்பந்தங்களை ஏற்படுத்தவும் தயாராகி விட்டார் என்று மீடியாபார்ட் குறிப்பிட்டுள்ளது. தற்போதைய இந்த புதிய ஒப்பந்தம் எத்தனை ஆயிரம் கோடி மதிப்பி லானது, ஒரு விமானத்தின் கொள் முதல் விலை எவ்வளவு என்பது இன் னும் வெளியாகவில்லை.

நீதிபதி கடிதம் எழுதியதன் பின்னணி

ரபேல் போர்விமான ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக, இந்தியாவின் 'டெப்ஸிஸ் சொல்யூஷன்ஸ்' என்ற நிறுவனத்திற்கு, பிரான்ஸ் நாட்டின் டஸ்ஸால்ட் நிறுவனம் 1 மில்லியன் யூரோக்களை (ரூ. 8 கோடியே 62 லட்சம்) 'பரிசாக' வழங்கியதை, அந்நாட் டின் ஊழல் தடுப்புப் பிரிவான 'ஏஜென்ஸ் பிராங்கா யிஸ் ஆன்டிகரப்ஷன் (AFA) கண்டுபிடித்தது. இந்தியாவின் தலைமை கணக்குத் தணிக்கை அலுவலகத்திற்கு (CAG) இணையான இந்த பிரான்ஸ்நாட்டு நிறுவனம், 2017ஆம் ஆண்டில் கார்ப்பரேட் நிறுவனங்களின் ஊழல் முறைகேடுகளை கண்டுபிடிப்பதற்காக அமைக்கப்பட்டு, அதன் பணிகளை மேற்கொண்ட போதுதான், 'வாடிக்கையாளர்களுக்கு பரிசு' என்ற தலைப்பில் 5 லட்சத்து 8 ஆயிரத்து 925 யூரோக்கள் மதிப்பிலான லஞ்சத்தைக் கண்டு பிடித்தது.

இந்தியாவிற்கு ரபேல் விமானங்களைத் தயாரித்து வழங்கிய 'டஸ்ஸால்ட்' நிறுவனமும், லஞ்சம் கொடுத்ததை ஒப்புக்கொண்டதாக கூறப் பட்டது. ஆதாரப்பூர்வமாகவே, ரூ. 8 கோடியே 62 லட்சம் லஞ்சம் வாங்கிய 'டெப்ஸிஸ் சொல்யூஷன்ஸ்' நிறுவனம், இந்திய அரசுக்கு, 36 ரபேல் போர் விமானங்களை தயாரித்துக் கொடுப்பதற்கான டஸ்ஸால்டின் துணை ஒப்பந்தக்காரர்களில் ஒன்று என்பது முக்கிய மானது. அதுமட்டுமல்ல, 'டெப்ஸிஸ் சொல்யூஷன்ஸ்' நிறுவனம் மூன்று தலைமுறைகளாக விமானம் மற்றும் பாதுகாப்புத் துறை சார்ந்த தொழில்களில் இடைத்தரகர்களாக விளங்கும் குப்தா குடும்பத்தினருக்குச் சொந்தமானது என்பதும் குறிப்பிடத் தக்கது.

ஆவணங்களைத் திருடித் தந்த சுஷென் குப்தா

இவற்றையெல்லாம் ஏற்கெனவே சுட்டிக்காட்டியிருந்த பிரான்ஸ் நாட்டின் 'மீடியாபார்ட்' செய்தி நிறுவனம், "ரூ. 8 கோடியே 62 லட்சம் லஞ்சம் வாங்கிய அந்த நபர், பாதுகாப்புத் துறை சம்பந்தமான மற்றொரு ஒப்பந்த விவகாரத்தில் அண்மையில் இந்திய அமலாக்கத்துறையால் கைது செய்யப் பட்டார்" என்று 'ஏஜென்ஸ் பிராங்காயிஸ் ஆன்டிக ரப்ஷன் (AFA) சரியாக கண்டுபிடித்தது;

அதாவது, அகஸ்டா வெஸ்ட்லேண்ட் வி.வி.ஐ.பி. இடைநிலை ஒப்பந்தத்தில் கைது செய்யப்பட்ட சுஷேன் மோகன் குப்தாவையே மறைமுகமாக ஏ.எப்.ஏ. அமைப்பு குறிப்பிட்டது. குப்தா, இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சகத்திடமிருந்து ரகசிய ஆவணங்களைப் பெற்று, டஸ்ஸால்ட் நிறுவனத்திற்கு வழங்கியதற்காகவே அவருக்கு ரூ. 8 கோடியே 62 லட்சம் லஞ்சம் வழங்கப்பட்டது என்று தெரிவித்தது.

மீடியாபார்ட் இதழில் வெளியான செய்திகள் மற்றும் பிரான்சைச் சேர்ந்த பொருளாதார குற்றங்களை விசாரித்து வரும் ஷெர்பா என்ற தொண்டு நிறுவனம் அளித்த புகார் ஆகியவற்றின் அடிப்படையில் ரபேல் ஊழல் விவகாரத்தில் விசாரணை நடத்த, ஜீன் பிரான்கோயிஸ் போநெர்ட் என்ற நீதிபதியை பிரான்ஸ் அரசு நியமித்தது. இதில், பிரான்ஸ் நீதிமன்றத்தில் தற்போதும் விசாரணை நடைபெற்று வருகிறது.

இந்நிலையில்தான், இந்தியப் பிரதமர் மோடி பிரான்ஸ் வந்துள்ள நிலையில், ரபேல் ஊழல் தொடர்பான விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு இந்திய அரசுக்கு, இவ்வழக்கை விசாரித்து வரும் பிரான்ஸ் நீதிபதி கடிதம் எழுதியுள்ளதாக மீடியாபார்ட் நிறுவனம் புதிய செய்தியை வெளியிட்டுள்ளது.

5 ஆண்டுகளாக விசாரணை இல்லை 'அகஸ்டா வெஸ்ட்லேண்ட்' முறைகேடு தொடர்பான விசாரணையின் போதே, இந்திய புலனாய்வு அமைப்பின் கோரிக்கை பேரில், சுஷென் மோகன் குப்தா தொடர்பான ஆவணங்களை மொரீஷியஸ் தலைமை வழக்கறிஞர் அலுவலகம் அளித்திருந்தது.

அதில், டஸ்ஸால்ட் நிறுவனம், 2007 முதல் 2012 வரையிலான காலகட்டத்தில் சுஷென் குப்தாவுக்கு 7.5 மில்லியன் யூரோ (இந்திய மதிப்பில் 64.26 கோடி ரூபாய்) அளவிற்கான தொகையை போலி ரசீதுகள் (False Invoices) மூலம் வழங்கியதாக தெரிவித்திருந்தது. பா.ஜ.க. ஆட்சியில் 2015ஆம் ஆண்டு டஸ்ஸால்ட் நிறுவனம் உடனான ரபேல் போர் விமான ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்ட போது, இதிலும் சுஷென் குப்தாவுக்கு (ரூ. 8 கோடியே 62 லட்சம் லஞ்சம்) பங்கு உள்ளதாக 2018 இல் சந்தேகம் எழுப்பப்பட்டு இருந்தது.

ஊழல் தொடர்பான இந்த ஆவணங்கள் 2018 அக்டோபர் 11 அன்றே கிடைத்தும், இந்திய புலனாய்வு அமைப்பான சி.பி.ஐ. விசாரணை நடத்தவில்லை" என்பதுதான் குற்றச்சாட்டாகும்.

திருவள்ளூர் தொகுதி, பூண்டி ஒன்றியம், திருப்பேர் ஊராட்சியில் வேளாண்மை உழவர் நலத்துறை சார்பில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் இடுபொருட்கள் மற்றும் 600 தென்னை மரக்கன்றுகளை விவசாயிகளுக்கு திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் வேளாண்மை துணை இயக்குனர் சுசிலா, உதவி செயற்பொறியாளர் இளையராஜா, ஒன்றிய குழு தலைவர் வெங்கட்ரமணா, ஒன்றிய குழு துணை தலைவர் மகாலட்சுமி மோதிலால், ஒன்றிய குழு உறுப்பினர்கள் சுபாஷினி பாஸ்கரன், விஜி, ஒன்றிய நிர்வாகிகள் பட்டரை கே.பாஸ்கரன், பூண்டி சித்ரா ரமேஷ், திருப்பேர் ஊராட்சி நிர்வாகிகள் கோவிந்தராஜ், பழனி, செல்வம், குமார் மற்றும் விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

மருத்துவ படிப்புகளுக்கான அகில இந்திய கலந்தாய்வு தொடங்கும் தேதி அறிவிப்பு !

சென்னை, ஜூலை.15- தமிழகம் உள்பட அனைத்து மாநில மருத்துவக் கல்லூரிகளுக்கும் 15 சதவீத இடங்கள் ஒதுக்கப்படுகின்றன.

மாணவர்கள் ஆன்லைன் மூலமாகவோ, சேர்க்கை மையங்கள் மூலமாகவோ கலந்தாய்வில் பங்கேற்கலாம். எம்.பி.பி.எஸ், பி.டி.எஸ் உள்ளிட்ட மருத்துவப் படிப்புகளில் சேர்வதற்கான அகில இந்திய கலந்தாய்வு வரும் ஜூலை 20ம் தேதி தொடங்கும் என மருத்துவ கலந்தாய்வுக் குழு அறிவித்துள்ளது.

எம்.பி.பி.எஸ்., இடங்களுக்கான முதல்கட்ட ஒதுக்கீட்டு ஜூலை 27, 28ம் தேதிகளில் ஆன்லைனில் நடைபெறுகிறது.

தமிழகம் உள்பட அனைத்து மாநில மருத்துவக் கல்லூரிகளுக்கும் 15 சதவீத இடங்கள் ஒதுக்கப்படுகின்றன. மாணவர்கள் ஆன்லைன் மூலமாகவோ, சேர்க்கை மையங்கள் மூலமாகவோ கலந்தாய்வில் பங்கேற்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கலைஞர் 100 1924 - 2023

கல்வி வளர்ச்சி நாள்



காமராஜர் உறுதியானவர், திடமானவர், தியாக சீலர் - முத்தமிழறிஞர் கலைஞர்

பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 121ஆவது பிறந்த நாள்

தமிழ்நாடு அரசின் சார்பில்

பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சீர்மிகு பெருமக்கள் பங்கேற்பார்கள்.

நாள் : 15.7.2023, சனிக்கிழமை, காலை 8.45 மணி
இடம் : நேரு அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, கல்லூரி சாலை, நங்கநல்லூர், சென்னை

செ.ம.தொ.இ./794/வரைகலை/2023

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 600 009

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in